1975 மார்ச் 14]

உடுமலைப் பேட்டை தாலுகாவில் மக்காச்சோளத்தை உபயோகித்து ஸ்டார்ச்சு, குளூகோஸ் முதலியவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஸ்டார்ச், குளூகோஸ் முதலியவற்றை தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதியை வழங்கியுள்ளது. அவர் அத்தொழிற்சாலையை உடுமலைப்பேட்டை தாலுக்காவில் நிறுவலாமா என்பது குறித்து பரிசீலித்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கான முதலீடு எவ்வளவு? இது தற்போது எந்த நிலையில் உள்ளது? அதை சீக்கிரம் முடிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது இப்போது பரிசீலனை செய்யப்படுகிற நிலையில்தான் உள்ளது. மக்காச்சோளம் எங்கு அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த இடத்தில் ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறார்கள். மதிப்பீடு தயாரிக்கிற நிலைக்கு வரவில்லை.

* 316 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்-மின்சார துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், பாலையூரில் குளூகோஸ் தொழிற்சாலை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு விவசாயத் தொழிற் கழகம், குளூகோஸ் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக மத்திய அரசிடமிருந்து பூர்வாங்க அனுமதிக் கடிதத்தைப் பெற்றுள்ளது. அந்தக் கழகம் இத்தொழிற்சாலையை புதுக்கோட்டை மாவட்டம், பாலையூரில் அமைக்கலாமா என்பதனை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : இதற்கான முதலீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், இது எப்போது துவங்கப்பட இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது பூர்வாங்க ஆராய்ச்சி நிலையில் இருக்கிறது. அதைப்பற்றி மேற்கொண்டு விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : குளூகோஸ் தொழிற்சாலை ஆரம்பிப்பதிலே அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் என்ன என்ன? அவை நம்முடைய மாநிலத்தில் போதுமான அளவு கிடைக்கிறதா என்பது ஆராயப்பட்டதா? அது எவ்வளவு இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்

கிறது ? இதுபோல கணக்கிடப்படாமலேயே பல தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது அரசாங்கத்தின் நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த குளுகோஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரை எங்கு மக்காச்சோளம் அதிகமாகக் கிடைக்கிறதோ அங்கு ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறார்கள்.

Starch 20,000 tons per annum, glucose 7,000 tons per annum, dextrose 3,600 tons per annum.

என்பதாக மக்காச் சோளத்தைக் கொண்டு இதைச் செய்யலாம் என்ற அடிப்படையில்தான் கோவை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் இதை ஆரம்பிக்க பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : ஏற்கனவே கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டையில் நாற்பத்து ஐந்தாயிரம் ஏக்கரா மக்காச்சோளம் விளைகிறது. ஆகவே, அவசியம் கோவை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என் தொகுதி மக்களுக்காகப் பேசியதற்கு நன்றி.

(முற்பகல் 9–30)

திரு. கே. என். குமாரசாமி : சார், இந்தத் தொழிற்சாலைகளை தனியாருக்குக் கொடுப்பதைக் காட்டிலும், அரசாங்கமே அந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமா ? அதே நேரத்தில் பிற்பட்ட பகுதிகளில் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே மத்திய அரசு கமலா சுகர்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு உடுமலைப் பேட்டையில் குளுகோஸ் தயாரிக்க அனுமதி கொடுத்தது 1953-ல். பிறகு ஜெய்பூர் சுகர்ஸ் கம்பெனி என்ற தனியார் நிறுவனத்திற்கு 1973-ல் மத்திய அரசு அனுமதி கொடுத்து இருக்கிறது. இப்போது மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்து இருப்பது சென்னையைச் சேர்ந்த ஒரு தனி நபருக்குத்தான். அதை எடுத்து தமிழ் நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் அனுமதி வாங்கியிருக்கிறது.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*317 வினு —திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானுமதுரை ஊராட்சி ஒன்றியம், சின்னக்கண்ணனூருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?